101

பதிவு எண்—M. 5720 வெள்ளிக்கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–4 குருகுலம், மாம்பாக்கம்; கர, கார்த்திகை; 14—12—51. தளிர்–11

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

பேரா இயற்கை

விளங்கிய வாழ்வைத் திருவள்ளுவர் சிறப்பாகப் போற்றுகின்றார். அந்நிலையில், நிலைத்த தன்மையையும் கருத்தோடு தழுவிச் செல்கின்றார். 'நீடு வாழ்வார்' என்று அவர் கூறும் இரு சொற்களிலும் இந்த இரண்டு கருத்துக்களும் மின்னுகின்றன.

இங்ஙனம் நீடு வாழ்தலே 'பேரா இயற்கை' என்பது. 'பேரா' என்பதனால் நிலைத்த தன்மையும், 'இயற்கை' என்பதனால் பெரு வாழ்வின் உண்மையும் புலப்படுகின்றன. அவா நீங்கிய நிலைமையே இப் பேரா இயற்கை தரும் என்று ஆசிரியர் மற்றோரிடத்தில் (அவா, ய) விளக்கியிருக்கின்றார். பிறப்பென்னும் துயரம் நீங்குதற்கு இது வழி.

விளங்கிய வாழ்வில் துயரம் இல்லை; இருண்ட இருப்பில் துயரம் உண்டு. துயரம் ஒரு பிறவியில் எத்தனையோ உண்டு. பிறவி யெடுப்பதனால், இங்ஙனம் துயரங்கள் வருகின்றன. எல்லாத் துயரங்களையும் சேர்த்துப் பார்க்கின்றபோது, பிறப்பே பெருந் துயரம் ஆகின்றது; 'பிறவியைப் பெருங் கடல்' என்பது முற்றும் பொருந்தும்.

சிறு சிறு துயரங்களை நீக்கிக்கொள்ள அவ்வப்போதும் மக்கள் முயல்கின்றனர். மொத்தத் துயரையும் ஒருங்கே நீக்கிக் கொள்ள முயல்வது சிறப்பு. அதற்குப், பிறப்பிறப்புகளாகிய அலைவையே போக்கிக்கொள்ள வேண்டும்.

இந்த நோக்கம் இருப்பவர்கள், பிறப்பும் இறப்பும் இயல்பாகவே இல்லாத ஒரு பெரியோன் துணையையே நாடுவர். அவனுக்குத்தான் இறைவன் என்று பெயர். அவனை மறந்த வேறு எவ்வகை முயற்சியினாலும் துணையினாலும், அது தவநெறியே யாகட்டும், அல்லது பெரியோர் வணக்கமே யாகட்டும், தேவர் வழிபாடே யாகட்டும், எதுவாகட்டும், இப் பெரும் பேறு கூடாது; அவன் திருவருள் ஒன்றினாலேதான் பிறவிப் பெருங்கடல் நீந்துதல் கூடும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

பிறவிப் பெருங் கடல்–பிறப்பு என்னும் பெரிய கடலை, நீந்துவர்–மக்களிற் சிலர் நீந்த முயல்வர்; இறைவன் அடி சேராதார்–ஆனால், இறைவன் திருவடிகளைப் பொருந்தாதார், நீந்தார்–நீந்திக் கடக்கமாட்டார்கள்.

நீந்துதல் – நீந்திக் கடத்தல்; கடக்கும் முயற்சி தோன்ற, 'நீந்தும்' தொழிலாற் கூறினார்.

உயிரைக் கவ்வும் இடர்கள் பல கடலில் இருத்தல்போலப் பிறவியிலும் இருத்தலின் அதனைக் 'கடல்' என்றும், அதன் எல்லை தெரியாமையாற் 'பெருங் கடல்' என்றும் விதந்தார்.

'இறைவன்' என்றது, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை! பிறவித் துயர் போக்க வெற்றுத் தவ நெறியையும் உயிர் வணக்கத்தையும் மேற்கொள்வோர் இருத்தலின், 'இறைவன் அடிசேராதார் நீந்தார்' என்றார்.

ஆதலால், 'பிறவிப் பெருங் கடல் நீந்துவர்' என்றது, தாம் அறிந்த சில நெறிகளையாதல் மேற்கொண்டு முயல்வாரை நினைந்தது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

இலை	கர, கார்த்திகை,	தளிர்
4	14-12-51 வெள்ளி	11

கல்விப் பணி

முதலிற் கவனிக்க வேண்டிய பணி கல்விப் பணியே. வெறும் பிழைப்புக்காக அன்று, உயர்தர வாழ்க்கைக்கு!

உணவு உடை நிழல், உடல் நலம் காத்தல் தொழில் நிலை பெருக்கல் பொருள் வகை போற்றல் முதலியவை மட்டும் வாழ்க்கை யாகாது. வாழ்க்கைக்கு இவை போன்ற பொருளாதார நிலைகள் கருவிகள். வாழ்வது வேறு; அது, கலைநலங் காணலும் அதற்கு மேல் உயர்ந்த அருள் நிலை நிற்றலு மாகும். அப் பெருவாழ்வை நோக்கமாக வைத்து மனிதன் செயல் புரியக் கடமைப்பட்டிருக்கிறான். அச் செயலில் முதற் செயல் கல்வி!

கல்விப் பணி, தேவையான பொருளாதார வகைகளையும் உண்டாக்கிக் கொண்டு, கலை அருள்வாழ்வில் வாழ்வதற் கேற்றபடி அமைய வேண்டும். பொருளாதாரத்தோடு நின்றுவிடும் நிலையில் இருந்தால், அப் பொருள் நிலையும் கெடும். ஆகவே, எல்லாவற்றிற்கும் அடிப்படை கல்விப் பணி என்பதும், அது, கலை அருள் வாழ்வுகளை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதும் உறுதி பெற வேண்டும்.

பொருட் பகுதியும் கலைப் பகுதியும் அறப் பகுதியும் வாழ்க்கையுண்மைகளாக அறிவுறுத்தி வாழ்க்கை வேதம் வகுத்தருளிய தெய்வப் பெரியார் திருவள்ளுவர், பொருட் பகுதியின் முதலிலேயே 'கல்வி' யைப் பற்றிப் பேசத் தொடங்கியது இக் கருத்தினாலேதான்.

ஆதலால், பொருளாதாரத்துக்கும் கலைக் காட்சிகளுக்கும் திட்டங்கள் வகுத்துச் செலவு செய்வதற்கு முந்துவோர், முதலில் கல்விப் பணிக்கே தக்க திட்டங்கள் வகுத்துத் தக்க செலவுகள் செய்யுங் கடமையுடையர்.

நாட்டில் எழுத்தறிவும், அதன் பின் மொழியறிவும், அதன் மேல் கலையறிவும், அவற்றோடு மெய்யறிவும் உண்டாக்கும் வகையில், கல்வித் திட்டம் பணி புரிய வேண்டும். இக் காலக் கல்வித் திட்டம் எதுவும் அவ்வளவு தூரம் செல்லவில்லை. மேலும் ஆரம்பக் கல்வியும், வேண்டுமளவு நடைபெறக் கூடிய வகையில் செலவுகள் செய்யப்படவில்லை.

அறியாமை யிருள் மக்களை நிறையக் கவ்வியிருக்கிறது. அது முற்றும் நீங்குமட்டும் பிற திட்டங்களுக்காகக் காத்திருக்க வேண்டுமென்று கூறவில்லை. வறுமை எவ்வளவு நீங்கப் பொருள் திட்டம் வகுக்கின்றோமோ, அதனினும் மிகுதியாக அறியாமை நீங்கப் பெரிய அளவில் கல்வித் திட்டங்களை முதலில் வகுத்து முதன்மையாய் மதித்துப் பெருகச் செலவுகள் செய்து நன்கு நடத்தி ஒப்ப நிறைவேற்ற வேண்டும் என்பதே கருத்து. இது, திருவள்ளுவர் வழி.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

இலக்கியங்களின் வடிவம் அழகு மிக்கது. நாட்டின் நாகரிகம், மொழியின் சிறப்பியல்பு, ஆசிரியரின் இயற்கைப் பண்பு, கல்விப் பருவம், பழக்கம் போன்றவற்றிற் கிணங்க அவ் வழகு அமைந்து வரும்.

இனி, நூல் நடைகளின் இயல்பு இத் திறனாய்வில் ஒரு தனிச்சிறப்பைப் பெறும். உரையின் வகை, பாட்டு உரைகளுக்கு ஏற்ற நடைப் பண்புகள், ஆராய்ச்சிக்கு எட்டாத அதன் மாட்சி முதலியன எண்ணி இன்புறத் தக்கன.

நாட்டின் புகழுக்கு வரம்பாக நிற்பன இலக்கிய நூல்கள்! இவற்றைத் தரும் ஆசிரியர்கள் இறைவனுக்குக் கைக் கருவிகள்!

அண்டத் தோற்றத்துக்கு முதல் இறை! இறையும் அதன் கருத்தும் மறைவாக உள்ளன! அம் மறைவை இகந்து இமைப்பது திரு! அத் திருவிடை மலரும் இறைமணமே இலக்கியம் தரும் இன்ப வெள்ளம்!

இன்பம், போலியின்பம், பேரின்பம், சிற்றின்பம் என்பவற்றின் இயல்புகளும், இந்நிலையில் இனிது விளக்கப்படவேண்டும். இன்பத்தை யளிக்கும் சுவைத்தன்மைக்கு அடிப்படை அழகியல்பே என்று கொண்டு, பல சுவைகளின் இயல்புகளும் இத்துறையில் சோதித்தற் குரியன.

இலக்கியத் திறனாய்வு

[திரு. J. M. முத்துவீராசாமி நாயுடு B.A.]

இலக்கிய நூல்களைத் தக்கபடி உணர்ந்து அவற்றின் நலங்களில் திளைத்தற்கு, அவற்றின் தன்மைகளையும் ஆயும் அறிவு இன்றியமையாததாகும். அவ்வறிவை வளர்த்து வளப்படுத்துதற்குத் திறனாய்வு நூல்கள் பல மொழிகளிலும் தோன்றியுள்ளன.

இக் கலையைப் பெரிதும் பொருட்படுத்தி ஆதரித்து வளர்த்துள்ளனர் மேனாட்டார். ஆங்கிலத்தில், இலக்கியத்தின் பொது இயல்புகளை விளக்கும் நூல்களே யன்றி, அதன் வகைகளின் தன்மைகளையும், அவ்வகைகளில் சிறப்புடைய பல நூல்கள் ஒவ்வொன்றின் செவ்வியையும் விளக்குவதற்கு எழுந்துள்ள நூல்களும் பலப்பல. செகப்பிரியர் நாடக நூல்களைப் பற்றி எழுந்துள்ள நூல்கள் மிகப் பலவாம்.

தமிழில் அவ்வப்போதும் வெளிவரும் நூல்களுக்கு நாள் இதழ்களிலும், கிழமை திங்கள் வெளியீடுகளிலும் மதிப்புரைகள் வெளியிடுகின்றனர். இம் மதிப்புரைகளுக்கு அடிப்படையான கோட்பாடுகள், இலக்கண விதிகளை வைத்தும் வழக்காறு பற்றியும் உரையாசிரியர்களின் அறிவு அநுபவங்களை ஒட்டியும் அமையப் பெற்றவை. அன்றியும், மேனாட்டு இலக்கியத் திறனாய்வு அளவைகளை வைத்துச் சிலர் தமிழ் நூல்களை மதிப்பிடுகின்றனர்.

பல மொழி இலக்கியங்களின் அடிப்படையான தத்துவங்களும் ஒத்த தன்மையன; ஆனமையின், பிற மொழி இலக்கிய ஆய்வுப் பொது அளவைகளைக் கொண்டு மதிப்பிடுதல் பொருந்தாததன்று.

எனினும், ஒவ்வொரு மொழிக்கும் தனித்தன்மைகள் இருத்தலும் உண்மை. ஆதலால், ஒத்த பரிசுகளுக்கமையக் கொண்ட பொது ஆய்வுக் கோட்பாடுகளை, மொழியின் தனித்தன்மைகளுக்கு அமையச் சிறப்பியல்புகள் பொருந்துமாறு உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இத்தகைய கோட்பாடும் தமிழுலகில் நிலவி வருகிறது. இதனை யொட்டி வெளிவந்த நூல்களும் உள்ளன. எனினும், இலக்கிய ஆய்வுக் கலையின் நுட்பம் அகலம் ஆழங்களை இன்னும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் காட்டும் நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும்.

இலக்கியத்தையும் அதனோடு தொடர்புடைய பல பொருள்களையும் மாணவரே யன்றி அறிஞர் பலரும் விரும்பிக் கற்றுத் திளைக்கும் வகையில் அமைக்க வேண்டும்.

இலக்கியத்துக்கே யன்றி, அருங்கலைகள் பிறவற்றிற்கும் இன்னும் கலைகள் பலவற்றிற்கும் அடிப்படையான பொருள்களைப் பற்றிய கருத்துக்களும் ஆராயப் படுதல் வேண்டும்.

அங்ஙனம் ஆராயும்போது, இலக்கியம் பிற அருங் கலைகளோடு அண்டத் தோற்றத்தில் இயல்பாக அரும்பி, மக்கள் வாழ்க்கைத் தரத்தோடு வளர்ந்து உருவாகும் வகை திட்டமாகக் காட்டப்பட வேண்டும். இதன் முடிபு, 'வாழ்க்கை தோன்றுமிடத்திருந்தே இலக்கியமும் தோன்றும்' என்ற தலைப்பைக் கொண்டு நிற்றல் காணலாம்.

மேலும், ஆசிரியர்களின் தனிப்பட்ட கருத்துகளுக்கு இணங்கக் கொண்ட முடிபுகளும் கருதுவதற்குரியன. இலக்கியம் இன்னதென்பதும் அதை உணர்த்தும் முறையும் ஆசிரியரின் தனிப்பட்ட கருத்துக்களுக்கு இணங்கவே அமைந்துவருகின்றன. ஆசிரியரின் தனித்தன்மைகள் அவரவர் நூல்களில் நிழலாடுதல் இயல்பு.

இனி, மொழிக்குரிய சிறப்பியல்களும் ஆராய்ச்சி முறையில் நன்கு சோதனை செய்யப்பட வேண்டும். தமிழ் மரபின்படி, நில வகைக்கும் திணை வகைக்குமுள்ள இயைபு எங்ஙனம் பொருந்தும் என்பது தெளிவாக விளக்கப்பட வேண்டும்.

அண்டத் தோற்றத்திற்கு முதலாகும் ஆக்கவியலே, இலக்கியத்திற்கும் முதலாகும். நோக்கை யொட்டிக் கருத்தையும், கருத்துண்மைக்குத் தக்கபடி, திருவருள் வாய்த்தவழி, பிற அருங் கலைகளை ஒத்து இலக்கியங்கள் அழகு வடிவொடு தோன்றும்.

உலக வழக்கு நாடக வழக்கு புலனெறி வழக்குகளும், முனிவர் புலவர்களின் இயல்புகளும், திருவருள் அது வந்தெய்தும் நிலை திருவருள் வாய்ப்பு முதலிய அரிய கருத்துக்களும் திறனாய்வு நூல்களில் நன்கு தெளிவுறுத்தப்பட வேண்டும்.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

சிலப்பதிகாரம்

10. இந்திர விழா

(முத்துசாமி)

காவிரிப்பூம் பட்டினத்தில் போகியாகிய இந்திரனுக்குச் சித்திரை மாதம் முழு நிலா நாள் தொடங்கி இருபத்தெட்டு நாட்கள் விழாக் கொண்டாடினர். அவ் விழாக் காலத்தில் மக்கள் ஆடல் பாடலில் ஈடுபட்டுக் களிப்போடிருந்தனர். அவ் விழாவைப் பற்றிக் கூற வந்த ஆசிரியர் இளங்கோவடிகள் அந் நகரத்தைப் பற்றி விரிவான குறிப்புக்கள் கொடுக்கின்றனர். அவற்றை நோக்கும்போது அக்கால மக்கள் நாகரிகத்தில் எவ்வளவு மேம்பட்டு விளங்கியிருந்தனர் என்பதை அறியலாம்.

அவ்வளவு சிறப்போடு விளங்கிய அந் நகரத்தை நேரில் காண்பதற்கில்லையே என்று நாம் ஏங்க வேண்டியதில்லை. நேரில் பார்த்தால் தெரிவது போலவே ஆசிரியர் எழுதிக் காட்டியிருக்கின்றனர். அதன் விரிவை இந்திர விழவூரெடுத்த காதையில் காண்க. ஈண்டும் சுருங்கக் காண்போம்.

அந் நகர் மருவூர்ப் பாக்கம் பட்டினப் பாக்கம் என்னும் இரு பகுதியினைக் கொண்டிருந்தது. மருவூர்ப் பாக்கம் கடற்கரையை ஒட்டியிருந்தது. பட்டினப் பாக்கம் அதற்கடுத்து நகரில் உட்பக்கமாய் இருந்தது. அவ்விரு பாக்கங்களும் நடுவில் உள்ள சோலையில் மரங்களே கால்களாகக் கொண்டு கட்டப்பட்ட நாளங்காடி **(Day Bazaar)** இருந்தது.

பாக்கம், பட்டினம் என்னும் பெயர்கள் கடற்கரையை அடுத்துள்ள ஊர்களுக்கு இடப்பட்டு விளங்குவன. இக்காலத்திலும் சென்னை நகரம் கடற்கரையை அடுத்து இருப்பதால், சென்னைப் பட்டினம் என்று பெயர் பெறுவதாயிற்று. பாக்கம் என்ற பெயரோடு பல பகுதிகள் சென்னையில் விளங்குவதும் காண்க. இவ்விதம் நம் பண்டைத் தமிழர் பழக்க வழக்கங்களோடு விளங்கும் சென்னைப் பட்டினத்தை ஆந்திரர்கள் அரும்பாடு பட்டும் வெற்றி காண முடியாததை நேயர்கள் அறிவார்கள்.

மருவூர்ப் பாக்கத்தில் காற்றியங்கும் சாளரங்களையுடைய பெரிய பெரிய மாளிகைகள் இருந்தன. மேலை நாட்டிலிருந்து வாணிபத்தின் பொருட்டு வந்த யவனர்களும் இன்னும் பிறநாட்டவரும் இருந்தனர்.

சாளரங்களை மான் கண் வடிவமாகச் செய்திருந்தனர்; சாளரத்தை ஆசிரியர் 'காற்று வரும் வழி' என்னும் பொருள் தோன்ற நல்ல அழகிய தமிழ்ப் பெயரால் 'காலதர்' (கால்-காற்று, அதர்-வழி) என்று குறிப்பிடுகிறார். இக்காலத்தில் 'சன்னல்' என்கின்றனர்.

அப் பாக்கத்தில் சுண்ணம் பூ முதலியன விற்போர் திரியும் வீதிகளும் பற்பல தொழிலாளர்கள் இருக்கைகளும் இருந்தன.

> "பட்டினும் மயிரினும் பருத்தி
> நூலினும் கட்டும் நுண்வினைக்
> காருகர் இருக்கையும்"

என்று வரும் அடிகளால் பட்டாடை, மயிராடை, பஞ்சாடை இவைகள் நெய்வோரும் இருந்தனர் என்று தெரிகிறது; பட்டு மயிர் பஞ்சு இவைகளாலான நுண்ணிய வேலைப்பாடமைந்த ஆடைகள் நெய்வதில் நல்ல திறமுடையவர்களாயிருந்தனர். மயிராடையை **Woolen cloth** என்பர் இக்காலத்தில்.

இன்னும், கடற்கரையையடுத்த பகுதியாதலால் 'மீன்விலைப் பரதவரும்' 'வெள்ளுப்புப் பகருநரும்' மற்றும் பல தொழிலாளர்களும் இருந்தனர்.

ஆங்குள்ள பல வீதிகளில் கூல வீதி யென்பது ஒன்று. கூலம் என்பது தானியம். தானியம் விற்கும் கடைகள் உள்ள வீதி கூல வீதி. நல்ல தமிழ்ப் பெயரால் அவ் வீதி அழைக்கப்பட்டிருத்தல் காண்க. சென்னையில் 'கொத்தவால் சாவடி' என்னும் பகுதியில் தானியங்கள் குவியல் குவியலாக உள்ள கடை வீதிகள் இருக்கின்றனவே. கூல வீதி என்ற பெயரால் ஒரு தெருவாவது அழைக்கப் படுகிறதா? திருநெல்வேலியில் கூலக் கடைத் தெரு என்று ஒரு தெரு இருக்கிறது. அங்குள்ள மக்கள் பொருள் தெரியாமல் அதனைக் கூளக் கடைத் தெரு என்று அழைக்கின்றனர். இனியேனும் அவர்கள் கூலவீதி யென்று அழகாக அழைப்பார்களாக!

இவ்வாறு விளங்கியது மருவூர்ப் பாக்கம்.

பட்டினப் பாக்கத்தில் 'கோவியன் வீதி', 'கொடித் தேர்

வீதி' 'பீடிகைத் தெரு' முதலிய தெருக்கள் இருந்தன. இன்னும், பெருங்குடி வணிகர் மாடமாளிகைகளும், உழவர், மறையோர், காலக்கணிதர், கடுங்கண் மறவர் முதலியவர்கள் இருக்கைகளும் சிறப்பாய் விளங்கின. கோவலன், கண்ணகி முதலியவர்களும் இங்குத்தான் இருந்திருத்தல் கூடும்.

இவ்விரண்டு பாக்கங்களின் நடுவில் நாளங்காடி இருந்தது. அதனைக் குறிப்பிடுகையில் ஆசிரியர் "கொடுப்போர் ஓதையும் (ஓதை-ஓசை) கொள்வோர் ஓதையும் நடுக்கின்றி நிலைஇய நாளங்காடி" என்று கூறுவதால் கொடுப்போருங் கொள்வோரும் மிக்குத் திரண்டு வாணிபம் நடைபெறும் சிறப்பு விளங்கும். நாளங்காடி யென்பது நல்ல தமிழ்ப் பெயர். இன்னும், சென்னையில் மிகுதியாக வாணிபம் நடக்கும் இடத்தைச் 'சைனு பசார்' என்று அழைக்கின்றனரே தவிர 'அங்காடி வீதி' என்று அழைக்கத் தெரிந்து கொள்ளவில்லை. தமிழ்நாடு தமிழ்நாடாய்க் காட்சியளிக்க விரும்பும் தமிழர்கள், நகராண்மைக் கழகத்தின் மூலம் இதுபோல்வனவற்றிற்கு ஆவன செய்தல் வேண்டும்.

அந் நாளங்காடிப் பகுதியில் நாளங்காடிப் பூதத்தின் இருக்கை இருந்தது. இந்திர விழாவின் போது அதற்கு மறக்குடிப் பெண்கள் பொங்கல் முதலியன படைத்து, "பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென" வாழ்த்திச் சென்றனர். பின்னர் மருவூர் மருங்கின் மறவரும் உயிர்ப்பலி கொடுத்து "வெற்றி வேந்தன் கொற்றங் கொள்க" என வாழ்த்திச் சென்றனர்.

எல்லா விழாக்களிலும் அரசனை வாழ்த்துதல் அக் கால வழக்கம். கண்ணகியின் திருமணத்திலும் பெண்கள் அரசனை வாழ்த்தினதை அறிக.

கரிகால் வளவன் வடநாடு படையெடுத்து இமயத்தின் சிமயத்தில் புலிச் சின்னத்தைப் பொறித்து மீண்டபோது வடநாட்டரசர்களில் சிலர் அவனுக்குப் பரிசாக நிர்மாணித்துக் கொடுத்த முத்துப்பந்தர், பட்டிமன்றம் (அறவுரை நிகழ்த்தும் இடம்) தோரணவாயில் இவைகளோடு கூடிய மண்டபத்திற்குப் பலி கொடுத்தனர். (தோரணவாயிலை **Welcome arch** என்பர் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள்)

கரிகாலன் படையெடுத்ததைக் குறிக்கும் இப் பகுதி சிலப்பதிகாரத்தில் முக்கியமான பகுதியாகும். இக்கால வரலாற்று நூல்களில் தமிழ்நாட்டின் சிறப்புக்கள் காணப்படுவதில்லை. அதனால் தமிழ்நாட்டு வரலாற்றை நன்கு விளங்கிக் கொள்ள மாணவர்களாலாவதில்லை. கஜினி முகமது, மகா அலெக்சாந்தர் முதலியவர்கள் படையெடுப்பைப் பற்றி விரிவாகத் தெரிந்திருப்பர்; ஆனால் கரிகாலனைப் பற்றித் தெரியாதிருப்பர். இந்நிலை மாறச் சிலப்பதிகாரத்தில் வரும் இது போன்ற பகுதிகளை நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். தக்க வரலாற்று நூல்களும் வரவேண்டும்.

இன்னும் காவிரிப்பூம் பட்டினத்தில் வியத்தகு செயல்கள் புரியும் ஐவகை மன்றங்கள் இருந்தன.

காவல் இல்லையென்று பொதிகளைத் திருடிச் செல்வோர் உளர் எனில் அவர்கள் தலையில் வைத்த அப் பொதியினை இறக்க மாட்டாதாராய் ஊரில் திரியச் செய்து தங்களுக்கே எடுத்துக் கொள்ள இயலாதபடி தண்டிக்கும் வெள்ளிடை மன்றமும்; கூனர், குறளர், ஊமையர், அழுகு மெய்யாளர், முதலியவர்கள் முழுகி நோய் நீங்கப் பெறும் இலஞ்சி மன்றமும், வஞ்சனையால் மருந் தூட்டப் பட்டவரும், அரவுக் கடியுண்டோரும், பேய்வாய்ப்பட்டோரும் வலம் வந்து தொழ நீங்கும் நெடுங்கால் மன்றமும், தவ வேடத்தில் நின்று

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

கொண்டு அவ நெறியிற் செல்வோர், மறைந்து தீநெறியிற்செல்லும் அலவற் பெண்டிர், அரசுக்கு வஞ்சனை செய்யும் அமைச்சர், பிறர்மனை நயப்போர், பொய்க் கரியாளர், புறங்கூற்றாளர் என்னும் இவர்கள் "கைக்கொள் பாசத்துக் கைப்படுவோர் எனக் காத நான்கும் கடுங்குரல் எடுப்பிப் பூதம் புடைத்துணும் பூதசதுக்கமும்;" அறங்கூறவையத்து நீதி தவறியபோது அழுது கண்ணீர் உகுக்கும் பாவை மன்றமும் ஆகிய ஐவகை மன்றங்கள் இருந்தன. அம்மன்றங்களிலும் பலிகள் கொடுத்தனர்.

பின்னர் வச்சிரக் கோட்டத்திலிருந்த மங்கல முரசை யானையின்மேல் ஏற்றி வெள்ளானைக் கோட்டத்திற்குக் கொணர்ந்து விழாவின் முதலும் கடையும் சாற்றினர். நகர வீதிகளையெல்லாம் நன்கு அலங்கரித்தனர். ஐம்பெருங் குழுவினர் எண்பேராயத்தினர் முதலியவர்கள் திரண்டு அரசனை வாழ்த்திக் காவிரியின் புண்ணிய நீரை இந்திரனுக்கு நீராட்டினர்.

இன்னும் அந்நகரில் சிவபெருமான், முருகன், பலதேவன், திருமால், இந்திரன் என்னும் இவர்கள் கோவிலும் இருந்தன. அங்கெல்லாம் இறைவாய்மையில் தப்பாத மறையோர்கள் ஓமங்கள் நடத்தினர்.

அறவோர் பள்ளி முதலிய இடங்களில் அறநெறிச் சொற்பொழிவுகள் நடந்தன. காவற் கூடத்திருந்த பகையரசர் விடுவிக்கப்பட்டனர். இவ்விதம் இந்திரனுக்குப் பெருவிழாக் கொண்டாடினர்.

அவ் விழா நாட்களில் நகர வீதிகளைப் பின்வருமாறு வர்ணிக்கிறார். உருவக நயம் கொண்ட பகுதிகள் அவை.

'திங்கள், இராகு கேது என்னும் பாம்புகளுக்குப் பயந்து குறுமுயல் துறந்து இருமருங்கும் கயல்மீனும் நடுவில் குமிழ மலரையும் கொண்டு உலவியது போலும்!'

மதிமுக மடவார் உலவுவதை இங்ஙனம் கூறினர்.

'காமனது மின்னுக்கொடியும் வருதலும் உண்டுகொல்! இலக்குமி அந் நகரத்துக்கு வந்து தங்கிவிட்டாள் என்று எண்ணித் தாமரை அவளைத் தேடி வீதிகளில் அலைந்தனபோலும்! கூற்றுவன் தன் ஆணியல்பு திரிந்து, ஆனால் அருந்தொழில் திரியாது நாணும் இன்மொழியும் கொண்டு திரிதலும் உண்டுகொல்!'

மின்னல் இடையும், தாமரை புரையும் முகமும், கூற்றன்ன கொல்லும் எழிலும் கொண்டு மாதரார் திரிதரும் வீதி என்பார் இங்ஙனம் கூறினர்.

அக்காலத்தில், இவ் விழாக் கொண்டாடியதைக் காணுமிடத்து, நாடு நாகரிகத்தில் மேம்பாடுடையதாய்க் காணப்பட்டாலும், போகத்தில் திளைத்துப் பொருள் துறையிலேயே காலத்தைச் செலவிட்டு அருள் நெறியில் கருத்தில்லாதவர்களாய்த் தாழ்ந்த மக்களும் அப்போது இருந்தனர் என்று தெரிகிறது. அவர்கள், போகியாகிய இந்திரனுக்கு இருபத்தெட்டு நாளளவும் பெருவிழாக் கொண்டாடி உயிர்ப் பலியிட்டு வேண்டிக் கொண்டனர். உயிர்ப் பலியைத் தடுக்கும் முறையில் அறவுரைகள் அவர்களுக்கு நடந்திலவோ, அன்றி நடந்தும் செவிமடுத்திலரோ அறியோம். முழுமுதற் கடவுளாய சிவபெருமானுக்கும் முருகனுக்கும் பெருவிழாக் கொண்டாடாது அமரர் தலைவனுக்குப் பெரு விழாக் கொண்டாடியும், சிறு தேவதைகளாகிய பூதக்கோயில் போன்றவைகளுக்குப் பலியிட்டும், ஆடல்பாடல் முதலியவைகளில் ஈடுபட்டும், பரத்தையரொடு கூடி மகிழ்ந்து கற்புடை மனைவியர் வருந்தவும் நடந்துகொண்டனர்.

அவர்களும் முழுமுதற் கடவுள் விழாவிற் கலந்துகொண்டு உயிர்ப் பலியின்றி ஏனைய சிறப்புக்களையும் நடத்தியிருந்தால் மேன்மையாயிருந்திருக்கும்.

சிந்திய கருத்துக்கள்

(பெரிய புராண விரிவுரையில்)

(மயிலை இராமலிங்கம்)

1 இறைவனை அடியார்களின் வாயிலாகத்தான் நன்கு காண முடியும். ஆதலின் இறைகாட்சியோடு அடியார்க் காட்சியும் வேண்டுவது தக்கது.

2. திருவெண்ணெய் நல்லூர் ஞானச்சிறப்புக்குச் சிறந்த தலம். காஞ்சிபுரம் அறச் சிறப்பிலும், திருவொற்றியூர் தெய்வத்தோடு ஒன்றும் சிறப்பிலும், திருமயிலை சித்திச் சிறப்பிலும் பெருமை வாய்ந்தன. ஆதலின் ஒவ்வொரு கோயிலிலும் அதனதன் சிறப்பில் ஆழ்ந்து உணர்தல் கடமை.

3. தெய்வம், தெளிவிலும் குணத்திலும் பதியும். தெய்வம் பதியாத உள்ளம் அறியாமை இருள் சூழ்ந்து பயம் திகைப்பு கலக்கம் முதலிய வற்றிற்கு இடமாயிருக்கும்.

4. உயிர்களின் அஞ்ஞான இருளில் இறைவன் இயங்குவதால் கர்ப்பக்கிரகம் அதிக ஒளியின்றிச் சற்று இருள் வண்ணமாய் இருக்கும். இருளில் ஆண்டவன் ஒளியுடன் விளங்குகின்றான். ஆதலின், நாமும் அறியாமை மக்களிடம் பணி புரிதல் வேண்டும், அது, இறை வணக்கமேயாகும். சான்றோர்கூடப் பணிகள் புரிந்தே ஞானமடைந்து உயர்ந்தனர்.

5. பூசை, தியானம், மந்திரம் செபித்தல் எல்லாம் செயற்கை. இவற்றால் வரும் அருளைவிடப் பணியின் மூலம் வரும் அருள் மிகச் சிறப்பு; பணியொழுக்கத்துக்கு ஆற்றல் உண்டாக்கப் பூசை முதலியன உதவும்.

6. நம்பிக்கைக்கு உரிய ஒருவன் நம்பன்; அவன் இறைவன்; அவன் இருக்கும் இடம் ஆலயம்.

7. அஞ்சாமை உடையார் அடியார்.

8. நூல்களை அவற்றின் ஆசிரியருடைய குறிப்போடு ஆராய்தலே தகுதி. தம் அறிவால் மட்டும் பார்த்தல் தகுதியாகாது.

9. கொடிமரத்தின் அருகில் நின்று கொடியேற்றிப் பின் பலி பீடத்தின் அருகில் பணிந்து பாசத்தைப் பலி கொடுத்துப் பின் நந்தியாகிய குருவைத் தொழுது அவர் வாயிலாக இறைவனை வணங்க வேண்டும். ஆலயத்தில் நந்திக்குக் குறுக்கும் நெடுக்குமாகப் போகக் கூடாது. வணங்கக் கூடாது; நந்திக்கு மறைக்காதபடி ஓரமாய் ஒதுங்கி நின்று இறைவனைக் காணவும் தொழவும் வேண்டும்.

10. மேகமும் புகையும் பார்வைக்கு ஒன்றுபோல் தோற்றுகின்றன. ஆனால், மேகம் மழை கொடுப்பதைப்போல், புகை கொடுப்பதில்லை. ஆதலால் தன்னலம் இழந்து பணி புரிபவர்களும் தன்னலம் கருதித் தொழில் செய்பவர்களும், பார்வைக்கு ஒருவரைப்போல் இருப்பினும், அவரவர் பணியின் பயனிலேதான் அவர் தன்மைகள் விளங்கும்.

11. தமிழ், இசையமைப்புக்கு மிகவும் ஏற்றதே. தமிழிசை என்பது போல், இந்தி இசை ஆங்கில இசை தெலுங்கிசை என்று வழங்குவதில்லை.

12. மொழி வேறு இசை வேறு என்று சிலர் கருதுதல் பொருந்தாது; மொழியுடன் பயின்று வரும் இசையே சிறந்தது.

13. அருளால் அரும்பிய சான்றோர் சொற்களை இக்கால அறிஞர் தம் நூலில் ஆளாமையினாலும், கடினம் என்று தவிர்த்ததாலும், இக்கால எளிய நடையில் பழகிய மக்கள் சான்றோர் நூல்களைப் படித்து உணரத் தெரியாததாலும், பிற மொழியின் விருப்பத்தாலும், தமிழறிஞர்களே மொழியின் ஆக்கத்தில் கடமையுணர்ச்சியோடு ஈடுபடாததாலும், தமிழ்மொழி தகுதியாக முன்னேறவில்லை.

14. தமிழ்ச் சொல்லே நெல்லாகவும், சான்றோர் நூல்களே நெற் கழனிகளாகவும், நூல்களின் கருத்தே விளைச்சலாகவும், கருத்தின் இசைவே அதன் சுவையாகவும் உணர்ந்து, தம் மொழியாக்கமே தம் வாழ்வு என்று மக்கள் வாழ்ந்த நாடு தமிழ் நாடு.

15. தலைவன் ஒரு குரல் கொடுத்தவுடன் எங்கெங்கோ யிருப்பவர் ஒன்று சேர்வதைப் போல், இசை, எங்கெங்கோ அலைந்து கொண்டிருக்கும் இந்திரியங்களை ஒன்று சேரச் செய்து கவரும் சக்தி வாய்ந்தது. ஆயர் குழலிசை, மாங்களையும் கவர்ந்ததால் இசையின் நுட்

* கார்த்திகைச் சாறு *

(சி. து. க.)

பூங்கொன்றைத் தாதுதிப் பொம்மென் றளிமுரலத்,
தீங்குசெறி வாடை செழித்துலவ, இன்னிசையார்
மாங்குயில்கள் வாயடங்க, வானங் குரலெழுப்ப,
மின்னகலா நன்முகில்கள் மேவி யுறைசிதறச்,
சின்ன நறும்பூச் செழுமுல்லை மென்முறுவல்
முற்றத் துறந்த முனிவோரும் இவ்வுலகில்
பற்றுக் கொளச்செய்யப், பைதற் குளிர்க்கிரங்கும்
அங்கண்மா ஞாலம் அழுகிழப்ப வந்திறுத்த
பொங்குகார் மாலைப் பொழுதிற் புதையிருட்டுப்

புன்கண் அறியாமை போயொழிய, மாந்தருளம்
உண்மை யறிவின்ப வோகை சிறந்தொளிர,
எங்கும் பெருவிளக்கம் ஈடிலாக் காட்சியதாய்த்
தங்குமிக் கார்த்திகைநாள் தான்வாழ்க! மக்களெலாம்

மாறுஞ் சமய மயக்கிற் றடுமாறி
வேறுங் கருத்தில் வினைவளர்த்துப் பூசல்விளை
நாலுங் கருத்தும் நுவன்றுலவா நோயோய்பு
மாலிங் கொழிந்தோட வள்ளல் வடலூரில்
ஆதியும் அந்தமும் அற்றானைப் பொங்கருளார்
சோதியாக் கண்ட துணையென்னச், சூழுலகில்

உய்யு நெறியிதென் றோர்ந்து நிலைசிறப்பச்
செய்ய வொளிமுதலைச் சிந்தை செயத்தூண்டுங்
கார்த்திகைச் சாற்றில், கலைமலரு நல்லுளமாங்
கூர்த்த வெழிலகலில் கூடுமருள் நெய்யூட்டி
ஞானச் சுடரேற்றி நந்தா தொளிதவழத்
தேனக் கலர்கொன்றைச் செய்யோன் திறமெண்ணிச்
சென்றநாள் தீமையெலாஞ் சென்றொழிய வாழுகம்யாம்
பொன்றாப் புகழிற் பொலிந்து.

நால்வர் கொள்கை

('மாதர் திருநெறிக் கழகம், வண்ணை, முதல் ஆண்டு விழாவின் தலைவர் திருமதி நீலாவதி இராம சுப்பிரமணியம் அவர்கள்)

நான் 20 ஆண்டுகளுக்கு முன் விருதுநகரில் கண்ட காட்சிக்கும் இப்போது நடைபெறும் கூட்டத்தின் காட்சிக்கும் உள்ள வேறுபாடு மிகப் பெரிது. பெண்கள் பேசுவது கூடாது என்று அன்று பேசப்பட்டது. ஆண்களோடு, பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வர் இந்நாட்டிலே என்று பாரதியார் பாடின பாடல் இன்று மெய்யாகிக் கொண்டிருக்கிறது.

விருதுநகர் மிகவும் பிற்போக்காக இருந்தது அக்காலத்தில்; ஆனால் இக்காலத்தில் அவ்வூர்ப் பெண்கள் சென்னையில் வந்து முழக்கம் செய்ய முற்பட்டிருக்கின்றனர். இது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

மாதர்களுக்கென்று தனிச் சங்கம் இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. மாதர் சங்கம் பிற்பட்டிருந்தால் நாடு எந்நாளும் முன்னேறாது; ஆகலின் மாதர்கள் முன்னேற வேண்டும்.

காந்தி முதலிய பெரியோர்கள் தத்தம் தாய்மார்களின் ஊக்கத்தினாலேதான் தாம் முன்னேறியதாகக் கூறுகின்றனர். ஆகலின் மாதர்கள் முன்னேறினால் அதனால் மக்களும், நாடும் முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

இம் மாதர் திருநெறிக் கழகத்தின் கொள்கை என்னவென்று கேட்டேன்; நால்வர்கள் கொள்கையே எங்கள் கொள்கை என்றனர். அது மிகவும் பாராட்டிற்குரியது.

நால்வர்கள் இந்த நாட்டுப் பெரியோர்கள். திருநெறியைக் கண்டவர்கள். தமிழும், சைவமும் பரப்பியவர்கள். பல்வேறு நெறியில் செல்லும் உலகம், நல்லார் நெறியில் செல்ல வேண்டும் என்று விழையும் இக் கழகத்தினரின் விருப்பம் போற்றுதற்குரியது.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD.

COIMBATORE.

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)